| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 27.07.2026 | |
| STC No.626/2023 | |
| சாட்சி :PW1 (Recall) | |
| பெயர் : திருமதி. லெட்சுமி | தொழில் : தாசில்தார் (ஓய்வு) |
| த/பெ/க/பெ. : திரு.பாலசுப்ரமணியன் | சமயம் : |
| கிராமம் : மருங்காபுரி | வயது : 62 /2026 |
| தாலுக்கா : | |
| ( எதிரி ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர்) | |

---------------------------------------------------------------

**சாட்சி மனுவின்பேரில் திரும்ப அழைக்கப்பட்டு, எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி நல்லதம்பி நிலம் சம்பந்தமாக கீழமை நீதிமன்றத்திலும், அடுத்த நீதிமன்றத்திலும் தனக்கு சாதகமாக தீர்ப்பு சொல்லப்பட்டு, அந்த தீர்ப்பு நகலை தங்களிடம் காட்டி இந்த தீர்ப்பு சம்பந்தமாக பட்டா வழங்குங்கள், நகல் வழங்குகள் என்று வந்தாரா என்றால் வந்தார். ஆனால் தீர்ப்பு நகல் எதுவும் என்னிடம் காட்டவில்லை. எதிரி என்னிடம் வழக்கின் தீர்ப்பு நகலை காட்டினார் என்றும், நான் அதனை மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நல்லதம்பி என்பவர் கொடுத்த மனுவின் அடிப்படையில் DRO அலுவலகத்தில் இருந்து எனக்கு விசாரணை செய்ய அறிவிப்பு வந்ததா என்றால் DRO அலுவலகத்தில் இருந்து மனு மற்றும் வந்தது. திருச்சிராப்பள்ளி மாவட்டம், மருங்காபுரி வட்டத்தில் உள்ள நல்லதம்பி, த/பெ. துரைச்சாமி என்பவர் மீது ஒரு பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்துள்ள காவல் நிலையத்தில் உள்ள புகாரில் யார், யார் என்னை திட்டினார்கள் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன போலிசார் விசாரணையிலும் பெயர் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். நீதிமன்றத்திற்கு வந்ததற்கு பிறகு போலிசாரின் உதவியுடம் கூடுதலாக எதிரிமீது குற்றச்சாட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் கூறியதுபோல் நான் பதவி ஓய்வு கிடையாது, வருகின்ற நபர்களிடம் கையூட்டு பெற்றுக்கொண்டு லஞ்ச ஒழிப்பு போலிசாரால் நான் கைது செய்யப்பட்டு, 15 நாட்கள் சிறையில் இருந்தேன். வெளியில் வந்துள்ளேன்

என்று சொன்னால் சரிதான். லஞ்ச ஒழிப்புத்துறையால் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற காவலில் இருந்தேன் என்ற விவரத்தை நீதிமன்றத்திலோ அல்லது காவல்துறை விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். நான் எதிரி மீது என்மீது லஞ்ச புகார் சுமத்தி குற்றம் சாட்டியுள்ளார் என நினைத்து அவர் மீது இந்த புகார் மனுவினை கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரியானவர் சரியான ஆவணங்களுடன் மனு செய்து அந்த மனுவின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்காமல் எதிரிமீது பொய்யாக எதிரிதான் தன்மீது லஞ்சப்புகார் கொடுத்தார் என நினைத்து அவர் கொடுத்த மனுவிற்கு நடவடிக்கை எடுக்காமல் இருந்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கொடுத்த புகாரிலோ, காவல் துறையில் கொடுத்த புகாரிலோ எந்தவிதமான உட்கூறுகளும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி பட்டா கேட்டு தாலுகா அலுவலகத்தில் நீண்ட வருடங்களாக அழைக்கலைக்கப்பட்டார் என்ற விவரம் தெரியுமா என்றால் எனக்குத்தெரியாது. நான் தாசில்தார் என்ற தோரணத்தில் எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்து எதிரியை பழிவாங்கும் என்கிற நோக்கத்தில் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரியை அழைக்கலைக்க வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தில் நீதிமன்றத்தில் இருந்து வரப்பெற்ற அழைப்பாணையை பெற்றும், இந்நீர் நீதிமன்றத்திற்கு ஆஜராகாமல் தவிர்த்து வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. தற்போது இருக்கும் விலாசத்தையும் மறைத்து காலதாமதப்படுத்த வேண்டும் என்கிற நோக்கத்தில எதிரியை அலைய விடும் நோக்கத்திலும் இந்த நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருந்து வந்துள்ளேன் என்றால் சரியல். போலிசார் என்னை எந்த தேதியில் விசாரித்து எந்த தேதியில் வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் 25.06.2022ம் தேதி மாலை 04.00 மணிக்கு என்னை போலிசார் விசாரித்தார்கள். ஆனால் காவல்நிலையத்திற்கு சென்று வாக்குமூலம் எழுதிக்கொடுக்கிறேன் என்று சொல்லிவிட்டு போய்விட்டார்கள்.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/–R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.